**செய்தி வெளியீடு எண்: 336** **நாள்: 18.05.2018**

## செய்தி வெளியீடு

நுகர்வோர் நலனை பாதுகாக்கும் வகையில் சட்டமுறை எடையளவு சட்டம் 2009 மற்றும் 2011ம் வருட சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகளின் கீழ் மாதம்தோறும் சிறப்பு ஆய்வுகள் தொழிலாளர் துறையின் கீழ் உள்ள சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அலுவலர்களால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வகையில் ஏப்ரல் 2018ம் மாதத்தில் தொழிலாளர் ஆணையர் முனைவர். இரா. நந்தகோபால், இ.ஆ.ப., அவர்களின் அறிவுரைப்படி சட்டமுறை எடையளவு சட்டம் 2009ன் கீழ் தமிழகத்தில் உள்ள இறைச்சி, மீன் கடைகள் மற்றும் சந்தைகளில் அமுலாக்க அலுவலர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறாக 1151 கடைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதில் 237 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இசைவு தீர்வு அறிவிப்பு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகளின் கீழ் சூப்பர் மார்க்கெட், மளிகை கடைகளில் விற்பனை செய்யப்படும் மைதா, கோதுமை, ரவை மற்றும் இறக்குமதி உரிமம் பெறாமல் விற்பனை செய்யப்படும் சிகரெட், வாசனை திரவியங்கள் மற்றும் பொட்டலப் பொருட்களில், சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகளின் கீழ் குறிப்பிட்ட சட்ட ரீதியான உரிய அறிவிப்புகள் இன்றியும், அதிகபட்ச சில்லரை விற்பனை விலையை விட அதிகமாக விலைக்கு விற்பனை செய்வது தொடர்பாகவும், அமுலாக்க அதிகாரிகளால் தமிழகம் முழுவதும் 847 நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் 163 முரண்பாடுகள் காணப்பட்டு, இசைவு தீர்வு அறிவிப்பு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதே போல் கடந்த ஏப்ரல் மாதத்தில் சட்டமுறை எடையளவு சட்ட விதிமுறைகள் மீறல் காரணமாக 773 முரண்பாடு கண்டறியப்பட்டு ரூ7,45,800/– இணக்க கட்டணமாகவும், பெட்ரோல் / டீசல் பங்குகளில் அளவு குறைவு காரணமாக 101 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு ரூ.110000/– இணக்க கட்டணமாகவும், பொட்டலப் பொருட்கள் விதியினை மீறிய வகையில்209 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு 6,25,500/– இணக்க கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற சிறப்பு ஆய்வுகள் இனி வரும் மாதங்களிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் முரண்பாடுகள் கண்டறியப்படின் அந்நிறுவனங்கள் மீது சட்ட விதிகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

பொட்டலப் பொருட்களின் மீது சட்ட ரீதியான அறிவிப்புகள் இல்லாதது, பொருளில் குறிப்பிட்ட அதிகபட்ச சில்லரை விற்பனை விலைக்கு மேல் அதிகமாக விற்பனை செய்வது மற்றும் அளவு குறைவு காணப்படுவது போன்ற புகார்கள் தொடர்பாக தொழிலாளர் துறையினால் அறிமுகப்படுத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வரும் TN-LMCTS (Tamil Nadu Legal Metrology Complaint Tracking System) என்ற கைப்பேசி செயலியை பதிவிறக்கம் செய்து அதன் மூலம் புகார் அளித்து நுகர்வோர்கள் பயன் பெறலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**